[4th January 1954

* THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Sir, the hon. Member, Sri Muthiah Chettiar, assumed in the course of his long and useful speech that 9 a.m. was not a right time to meet. I do not know with what standards he measures these things. I do not see any reason at all to think that the hours you have fixed for the Legislative Assembly meetings, namely, 9 to 1-30 is not the best time of the day for work. It is a time when every member is expected to be vigorous being the first part of the day. We cannot begin earlier than nine. You have fixed 9 to 1-30 and that is the best part of the day. The Upper Chamber will sit in the afternoons—in the fag-end of the day. I think it is a fair distribution. With regard to the views he has expressed on the importance of the interpellations, nobody denies the importance of interpellations. It is in fact the non-official time of the sittings, so to say, everyday for one hour when they have the whole House at their disposal. It is very important and it is a very useful part of the legislature's work. Therefore, it is that 9 to 10, is the best part of the day, is given to that work. I do not see why Mr. Muthiah Chettiar is imagining that 9 o'clock is a difficult time, for that work. But as far as one could judge from the proceedings of the House itself, all the Members are enjoying that one hour thoroughly and most energetically. Any other time would be less useful. As a matter of fact, if the House began at a later hour, the general impression would be that it is a dull House. Therefore, I think that 9 to 1-30 is the best time.

" Sri Muthiah Chettiar went on to suggest various changes in the buildings, accommodation and all that. We can go through them leisurely. It is not possible to do it just now. The question now is whether we meet tomorrow at 9 o'clock. Any change now, Sir, is not convenient."

IV.—POINT OF INFORMATION *RE* THE REPORTED ANNOUNCEMENT OF A VACANCY OF AN ASSEMBLY SEAT IN THE TIRUNELVELI DISTRICT.

SRI K. T. KOSALRAM :—" இந்த சபையின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு கனம் சபாநாயகர் கையில் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் கொண்டுவந்து சில விஷயங்களை இங்கு சொல்ல விரும்புகிறேன்."

MR. SPEAKER :—" எழுதிக்கொடுத்துவிட்டால் மிகவும் சௌகரியமாக இருக்கும்."

SRI K. T. KOSALRAM :—" ஒரு தொகுதியில், அதுவும் திருநெல்வேலி தொகுதியில் ஒரு மெம்பர் ஸ்தானம் காலியாகபோகின்றது. அதில் திரு. எஸ்.பி. ஆதித்தன் அவர்கள் நிற்கப்போவதாகவும் இந்த சபையில் தலைவராக இருக்கின்ற எனது நண்பர் கனம் மந்திரி ஸி. சுப்ரமண்யம் அவர்கள் சொல்லியிருக்கிறார். இந்த சபையில் இதுவரை ஒரு மெம்பர் ஸ்தானமும் இப்போது காலியாக இல்லை. கோர்ட்டிலிருக்கின்ற விஷயத்தை, இன்னும் அதுபற்றி ஒன்றும் தெரியாத விஷயத்தை இந்த சபை தலைவர் சென்ற மாதம் 31-ந் தேதி மேல் சபையில் பேசியிருக்கிறார். இது ஒழுங்கா ? இவ்வாறு சபைத்தலைவர் சொல்வது நியாயமா ? "

4th January 1954]

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Sir, as a matter of information, I would like to mention to you, that I was present at the time in the other House. No reference was made to Sri Kosalram's seat or *his* vacancy or the tribunal. I think, Sir, he is making matters worse by expanding on it."

MR. SPEAKER :—" The hon. Member may give it in writing to me. I shall call for the official report and examine it. At the same time I may say that the hon. Member should not take cognizance of matters that have taken place in the other House."

SRI K. T. KOSALRAM :—" என்னுடைய பெயர் வந்ததாகச் சொல்லவில்லை. திருநெல்வேலியில் ஒரு மெம்பர் ஸ்தானம் காலியாகப் போகின்றது என்று சொன்னாரென்றுதான் இங்கு சொல்லுகிறேன். அந்த ஸ்தானம் எந்த ஸ்தானம் என்று நிச்சயமாக முதல் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? இதுபற்றி கனம் சுப்ரமணியம் கோர்ட்டுக்கு ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறாரா ? இவ்வாறு இந்தச் சபையில் பேசுவது கண்டெம்ட் அப் கோர்ட் ஆயிற்றே ? கண்டெம்ட் அப் தி ஹவுஸ் அல்லவா ? நான் 6 வருஷமாக இந்த அசெம்பிளியில் இருந்ததற்காக இதைப்பற்றி சொல்ல உரிமையில்லையா ? கனம் சபைத்தலைவர் அவர்கள் இந்த விஷயத்தில் பாரபட்சமின்றி ஒத்திப்போடாமல் இந்த முக்கியமான பிரச்னையை விவாதத்திற்குக் கொண்டுவரவேண்டும். நானும் கன்வின்ஸ் (convince) படுத்தத் தயாராக உள்ளேன். இதுபற்றி உங்கள் அறைச்கு வந்தும் சமர்பிக்கின்றேன்."

MR. SPEAKER :—" வரும்பொழுது பிரிவிலெஜ் மோஷனை எழுதிக் கொண்டு வாருங்கள்."

V.—PRIVILEGE MOTION *RE* SRI KOSALRAM'S SPEECH PUBLISHED IN THE *DINAMANI*—DISCUSSION *RE*.

SRI A. SAMBASIVAM :—" 23-12-53-ல் இந்த சபையில் பேசியதை சென்னையில் வெளியாகும் ஒரு தினசரி செய்தித்தாள் திருத்தி வெளியிட்டதற்காக அதன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னேன். கனம் சபைத் தலைவர் அவர்கள் அது விஷயமாக என்ன செய்தார் ? அதன் முடிவு என்னவாயிற்று ? என்பதை தெரிந்துகொள்ள விரும்புகின்றேன், தாங்கள் அதைத் தெரிவிப்பதாகவும் சொன்னீர்கள். அப்படியிருந்தும் இன்னும் ஒன்றும் தெரிவிக்க வில்லையே என்று கேட்கின்றேன்."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, the hon. Member is referring to the privilege motion moved the other day. The Speaker said that he would correspond with the editor and inform the House the result."

MR. SPEAKER :—" Yes, the editor has been addressed and I am awaiting his reply. As soon as it is received, I will inform the House."